ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]

Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 38 ]

Total No. of Questions : 38 ]

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 85-T**

**Code No. : 85-T**

**A**

**CCE RF**
**CCE RR**

**Question Paper Serial No. 101**

இங்கிருந்து பிரிக்கவும்

# ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

# Subject : SOCIAL SCIENCE (சமூக அறிவியல்)

**( ತಮಿಳು ಮಾಧ್ಯಮ / Tamil Medium )**

**( ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ & ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Fresh & Regular Repeater )**

ದಿನಾಂಕ : 06. 04. 2022 ] [ Date : 06. 04. 2022

ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–1-45 ರವರೆಗೆ ] [ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80 ] [ Max. Marks : 80

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 38-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

**I.** **பின்வரும் வினாக்கள்/மற்றும் முழுமைப்பெறாத கூற்றுகளுக்கு *நான்கு* மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும் :** **8 × 1 = 8**

1. இந்தியா மற்றும் ஐரோப்பா இடையே கடல் வழியைக் கண்டுபிடித்தவர்

   (A) கொலம்பஸ்

   (B) வாஸ்கோடகாமா

   (C) அல்மெடா

   (D) அல்புகர்க்கு

2. அலி சகோதரர்களால் தொடங்கப்பட்ட இயக்கம்

   (A) ஒத்துழையாமை இயக்கம்

   (B) கிளாபத் இயக்கம்

   (C) சட்ட மறுப்பு இயக்கம்

   (D) வெள்ளையனே வெளியேறு இயக்கம்

3. உலகின் இரு வல்லரசு நாடுகளுடன் சேராமல் இடைவெளியை கடைப்பிடிக்கும் கொள்கை

(A) அணிசேராக் கொள்கை

(B) நிறவேறுபாட்டுக் கொள்கை

(C) புதிய குடியேற்றத்திற்கு எதிர்ப்பு

(D) ஆயுத ஒழிப்பு

4. இவைகளுள் ஊதியமற்ற உழைப்பாளர்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டு

(A) செவிலியர்

(B) ஆசிரியர்

(C) இல்லத்து அரசி ( மனைவி Housewife )

(D) காவலர்

5. Dr. B.R. அம்பேத்கார் தொடங்கிய பத்திரிக்கை

(A) கேசரி

(B) மூகநாயக

(C) மராத்தா

(D) பாம்பே சமாச்சார்

6. நாகார்ஜூன சாகர் வனவிலங்கு சரணாலயம் இருக்கும் மாநிலம்

(A) கருநாடகம்

(B) கேரளம்

(C) உத்திரப்பிரதேசம்

(D) தெலுங்கானா

7. எந்த அரசியல் சாசன சட்டத் திருத்தத்தின்படி மூன்று நிலை பஞ்சாயத்துராஜ் ( Three level of Panchayat ) முறை நடைமுறைப்படுத்தப்பட்டது

(A) 24வது (B) 42வது

(C) 73வது (D) 92வது

8. ஒரு நாளில் பலமுறை பணம் செலுத்தி அல்லது திரும்ப பெறுவதற்கு வகை செய்யும் வங்கி கணக்கு முறை

(A) சேமிப்பு வங்கி கணக்கு

(B) நடப்பு வங்கி கணக்கு

(C) தொடர் வைப்பு வங்கி கணக்கு

(D) நிரந்தர வைப்பு வங்கி கணக்கு

**II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும் : $8 \times 1 = 8$**

9. வெல்லெஸ்லி பிரபு தன் பதவியை ராஜினாமா செய்து விட்டு இங்கிலாந்திற்கு திரும்பி சென்றார். ஏன்?

10. இந்தியாவின் முதல் குடியரசுத்தலைவர் யார்?

11. நாம் ஒவ்வொரு ஆண்டும் எப்பொழுது மனித உரிமைகள் தினம் கொண்டாடுகிறோம்?

12. மக்கள் கூட்டம் என்றால் என்ன?

13. மேற்கு தொடர்ச்சி மலைகளும், மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளும் எங்கு சந்திக்கின்றன?

14. நதி முகத்துவாரப் பகுதிகளில் காணப்படும் காடுகளின் வகை எது?

15. தேசிய வருமானம் என்றால் என்ன?

16. ‘விப்ரோ’-வை நிறுவியவர் யார்?

**III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டிலிருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளிக்கவும் :** **8 × 2 = 16**

17. பக்ஸார் போரின் விளைவுகள் யாவை?

18. துணைப்படை திட்டத்தின் நிபந்தனைகள் யாவை?

19. பஞ்சசீல கொள்கைகள் யாவை?

*அல்லது*

மனித உரிமைகளை நடைமுறைப்படுத்த இந்தியா நடத்தி வரும் போராட்டத்தை விவரி.

20. முறைப்படுத்தப்படாத உழைப்பாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை பட்டியலிடுக.

*அல்லது*

ஏதாவது நான்கு சுற்றுச்சூழல் இயக்கங்களை குறிப்பிடுக.

21. இந்தியாவின் முக்கிய பருவக் காலங்கள் யாவை ?

22. மண்ணரிப்புக்கான காரணங்கள் யாவை ?

23. வீட்டுத் திட்டங்களை குறிப்பிடுக.

24. நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் நோக்கங்கள் யாவை ?

**IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடையளிக்கவும் :**

**9 × 3 = 27**

25. இந்தியாவில் ஆங்கில கல்வியின் மூலம் ஏற்பட்ட விளைவுகள் யாவை ?

26. ஆரிய சமாஜத்தின் நோக்கங்கள் யாவை ?

*அல்லது*

இந்தியா விடுதலை அடைந்த பிறகு எதிர்கொண்ட பிரச்சனைகள் யாவை ?

27. முதல் இந்திய சுதந்திரப் போரின் தோல்விக்கான காரணங்கள் யாவை ?

28. ரஷ்யாவுடன் இந்தியா கொண்டுள்ள உறவு பற்றி விவரி.

29. இந்தியாவில் தீண்டாமையை ஒழிக்க அரசு எடுத்த சட்ட நடவடிக்கைகள் யாவை ?

30. ஓர் இடத்தில் தொழிற்சாலைகள் அமைக்கத் தேவையான காரணிகள் யாவை ?

*அல்லது*

புயல் காற்றுகளினால் ஏற்படும் விளைவுகளை பட்டியலிடுக.

31. போக்குவரத்தின் முக்கியத்துவங்கள் குறித்து விவரி.

32. இந்தியாவில் தற்பொழுது காணப்படும் பல்வேறு வகையான பாலின வேறுபாடுகளை குறிப்பிடுக.

*அல்லது*

இந்தியாவில் நடைமுறையிலுள்ள பஞ்சாயத்துராஜ் அமைப்பின் குண இயல்புகளை விவரி.

33. வங்கிகளின் செயல்பாடுகள் யாவை ?

*அல்லது*

பொருளாதார முன்னேற்றத்தில் தொழில் முனைவோரின் பங்குகள் யாவை ?

**V. பின்வரும் வினாக்களுக்கு எட்டு வாக்கியங்களில் விடையளிக்கவும் :**

**$4 \times 4 = 16$**

34. தோண்டியவாக் ஆங்கிலேயருக்கு எதிராக எவ்வாறு போராடினார் ?

*அல்லது*

இந்திய விடுதலை போராட்டத்தில் தீவிரவாதிகளின் பங்கு குறித்து எழுதுக.

35. இந்தியாவின் விடுதலை போராட்டத்தில் சுபாஷ் சந்திரபோசின் பங்கு குறித்து விவரி.

36. இந்தியாவில் பெண்களின் நிலையை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

37. இந்தியாவில் பின்பற்றப்படும் வேளாண்மைகளின் வகைகளை பட்டியலிடுக.

**VI.** 38. **இந்திய தரைப்படம் வரைந்து பின்வருமிடங்களை குறிக்கவும் :**

**1 + 4 = 5**

a) $23\frac{1}{2}^{\circ}$ வடக்கு கடகரேகை

b) பக்ரா நங்கல்

c) காவேரி ஆறு

d) மும்பை

*பார்வைத் திறன் அற்றோர்க்கான வினா :* **(வினா எண் 38 க்கான மாற்று வினா)** **5**

பல்நோக்கு ஆற்று பள்ளத்தாக்கு அணைக்கட்டு திட்டங்களின் நோக்கங்கள் யாவை ?